2014 பிப்ரவரி 1]

ரூபாயும், அரியலூர் மாவட்டத்திற்கு 67.20 இலட்சம் ரூபாயும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு 67.20 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வரும் நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

கூடுதல் பேருந்து

***6774—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து சென்னைக்கு கூடுதலாக விரைவுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஏழைக் குடிசையில் வாழும் ஏழையருக்கும், ஓயாமல் சிந்தித்து உன்னத திட்டங்களை வழங்கி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் 2½ ஆண்டுகளில் 1,426 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் கொடி அசைத்து, துவக்கி வைக்கப்பட்டு, இன்று மக்களுடைய பயன்பாட்டில், மக்கள் சேவையை ஆற்றிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 1—9—2012 முதல் பேராவூரணியிலிருந்து சென்னைக்கு தடம் எண் 246e பேருந்துகள் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 1

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.

திரு. செ. அருண் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அரசியல் அனுபவம் மிகவும் குறைவு. என்னுடைய Right hand side–ல் இருந்த ஒரு எம்.எல்.ஏ. ஒரு வருடத்தில் 200 கேள்விகள் கொடுத்தேன். ஆனால், பதில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நான் 10 நியாயமான கேள்விகளைத்தான் கேட்டேன். அவற்றிலே 5 கேள்விகளுக்கு விடை கிடைத்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசைப் பாராட்டாமல் இருப்பது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. Such a dynamic Leader; She has the focus; (Thumping of desks) She has the determination; She has concentration; She is not selfish. தனக்காக எதுவும் பண்ணவில்லை. நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவே பாராட்டும் அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை. எனக்கு ஒரே ஒரு சிறிய குறை மட்டும் இருக்கிறது. இந்தக் கேள்வியை நான் இன்னும் ஆறு மாதங்கள் கழித்து கேட்டிருந்தால், பேராவூரணியிலிருந்து டெல்லி வரைக்கும் பஸ் கிடைத்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளியே கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். 300 சீட்டுகளுக்குத்தான் கூட்டணி அமைக்க வேண்டும். அவர்கள் மறந்து விட்டார்கள். 40 சீட்டுகளை மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டார்கள். அந்த முடிவை மாற்ற மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்த ஆட்சிதான் டெல்லியில் இருக்கும்.

அம்மா அவர்களிடத்தில் ஒரே ஒரு வேண்டுகோள். உங்கள் கம்பெனியால்தான் நாங்கள் உருவாக்கப்பட்டோம். இன்றைக்கு வரைக்கும் manufacturer நீங்கள். ஆனால், வேறு ஒரு brand–ல் இருக்கிறோம். அது எப்போது மாறும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல விடை கொடுத்தீர்களென்றால் நல்லது. எங்கள் 7 பேர்கள் சார்பில் மட்டுமல்ல, பேராவூரணி தொகுதி மக்கள் சார்பிலும் நான் மீண்டும் இந்த அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு

2014 பிப்ரவரி 1]

முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

வீட்டு வசதி

***32465—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு மீன் வளத் துறையின்மூலம் வீடு கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், நாளைய பாரதப் பிரதமர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டேன். கட்டித் தருவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறினார்கள். அங்கே அதிக மக்கள் இல்லை. திருமூர்த்தி நகர் பகுதியிலே 8 குடும்பங்கள்*